2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(உ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத் தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) நீக்கறவு சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத் தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்)*

நீக்கறவு சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2021), மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத் தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) நீக்கறவு சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள். சுருக்கமாக இந்தச் சட்டமுன்வடிவு பற்றி ஒரு வரியில் சொல்லுங்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களாட்சித் தத்துவத்தின் நான்கு தூண்களில் ஒன்றானது நிருவாகம். நிருவாகத்தின் அடிப்படையில் விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்ட அம்மாவின் அரசு, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியாரின் நல்லாட்சியில், 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத் தொழில் மற்றும் சேவைகள் சட்டம் கொண்டுவரப்பட்டது. தமிழகத்தில் கரும்பு, பருத்தி, மூலிகைப் பயிர்கள் பயிரிடுவது, இறைச்சி கோழி உற்பத்தி போன்றவை பல ஆண்டுகளாக ஒப்பந்த முறையில் நடக்கின்றன. எனினும், ஒப்பந்த சாகுபடியில் பங்குபெறும் விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க சட்டமில்லை. இதனைக் கருத்தில்கொண்டுதான் மாண்புமிகு அம்மாவின் அரசில் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணையம் மற்றும் சேவைகள் சட்டம், 2019 இம்மாமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. இச்சட்டம் அரசிதழில் வெளியாகியுள்ளது. தேசிய அளவில் ஒப்பந்த சாகுபடிக்கென்று பிரத்யேகமாக அம்மாவின்

@ 28-8-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2021 செப்டம்பர் 13] [திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி]

அரசு முதன்முதலாக தனிச் சட்டத்தை வடிவமைத்தது. இச்சட்டத்தின்படி நெல் உள்ளிட்ட தானிய வகைகள், பருப்பு வகைகள், எண்ணெய்வித்துக்கள், நார் வகைகள், காய், கனிகள், நறுமணப் பொருட்கள், கால்நடை உற்பத்திப் பொருட்கள், வனப் பொருட்கள், பட்டுக் கூடு, பட்டு இழை, கரும்பு உள்ளிட்ட 110 பொருட்களை ஒப்பந்த சாகுபடியில் ஒப்பந்தம் செய்து விளை பொருட்களை விற்பனை செய்ய வழிவகை செய்யப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி கொள்முதலாளர் அல்லது உணவு பதப்படுத்தும் நிறுவனத்துடன் விவசாயிகள் ஒப்பந்தம் செய்யும்போது, அன்றைய தினத்தின் விலையையே பொருட்களைப் பரிமாற்றம் செய்யும்போது நிர்ணயிக்கும் வகையில் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. அதிக விளைச்சல் காரணமாக விலை வீழ்ச்சி ஏற்படும் நேரங்களில் விவசாயிகள் பெரும் இழப்புக்கு ஆளாகின்றனர்.

பிற்பகல் 1–45

இந்த புதிய ஒப்பந்தச் சட்டத்தால் விவசாயிகளுக்கு எவ்வித பொருள் அல்லது பண இழப்பும் ஏற்படாது. விரும்புவோர் ஒப்பந்த சாகுபடி முறையில் சேரலாம். இச்சட்டத்தால் தரிசு நிலங்கள், பயனற்ற நிலங்கள், விவசாயம் செய்யப்படாத நிலங்கள் பயன்பாட்டுக்கு வரும். விலை வீழ்ச்சியடையும் காலங்களில் விவசாயிகளைக் காப்பாற்ற இச்சட்டம் உதவும். பயிர்க் காப்பீடு, அரசு சலுகைகளையும் பெறலாம்.

மண்ணுக்கு மருதாணி பூசி, நிலத்தில் மரகதப் போர்வை போர்த்தி அழகு பார்க்கும் விவசாயிகளின் நலனுக்காக இந்த நீக்கறவுச் சட்டமுன்வடிவை எதிர்ப்பதோடு, இதனை மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கேட்டுக்கொள்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தால், ஒப்பந்தத்தில்—விவசாயிகளிடமிருந்து தேவைக்காக அதிகக் கட்டணம் வசூலிக்கப்படும். ஏனென்றால், அதிகக் கட்டணம் வசூலிக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படும். நிறுவனத்திடமிருந்து மட்டும்தான் இடுபொருட்கள் பெறவேண்டும் என்ற கட்டாயம்

ஏற்படும். தரத்தைக் காரணம் காட்டி விலையைக் குறைக்கலாம். விவசாயிகள் கொண்டுவந்த பொருட்களின் தரத்தைக் காட்டி விலையைக் குறைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும். அதேபோல, விலை குறைவான காலங்களில் கொள்முதல் செய்யாமல் தவிர்க்கலாம். இந்தச் சட்டம் வந்தது என்றால், விலை குறையும்போது, அதனைக் கொள்முதல் செய்யாமலேயே தவிர்க்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். அதேபோன்று நீதிமன்றங்களை அணுகுவதற்கு வழி கிடையாது. எனவே, விவசாயிகள் தங்களுடைய குறைகளை நீதிமன்றங்களின் மூலமாக தீர்த்துக்கொள்ள, கேட்கக்கூடிய வாய்ப்பு மறுக்கப்படுகிறது. விளைபொருட்களின் விலைக்கு எந்தவித உத்தரவாதமும் கிடையாது. இச்சட்டம், கொள்முதல் செய்யும் நபர்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு பாதுகாப்பாக மட்டுமேதான் உள்ளது. அதனால்தான், இந்தச் சட்டத்தை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத் தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஊ) தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல்*